# நீதித்துறை நடுவர், கூடுதல் மகளிர் நீதிமன்றம், திருவாரூர்

முன்னிலை :- திரு. S. முஹம்மது பாசில், M.Sc., B.L.,
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம் (மு.கூ.பொ),
(நீதித்துறை நடுவர் நிலை), திருவாரூர்.

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16 ஆம் நாள் திங்கட்கிழமை

**C.C.No. 117/2025**
**CNR No. TNTV13-000361-2025**

தமிழ்நாடு அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,
திருவாரூர் தாலுக்கா காவல் நிலையம்,
காவல்நிலைய குற்ற எண். 459/2016 ................ குற்ற முறையீட்டாளர்

// எதிர்//

1. தேவதாஸ்,
த/பெ. முருகையன்,
ஓவளிக்குடி மாவூர் அஞ்சல்,
திருவாரூர்.
2. ஜெயலெட்சுமி,
க/பெ. தேவதாஸ்,
ஓவளிக்குடி மாவூர் அஞ்சல்,
திருவாரூர்.
3. நாகம்மாள், (Died) (கடந்த 16.12.2024 ம் இறந்து விட்டார் என்பதற்கான
க/பெ. முருகையன், இறப்புச் சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது)
ஓவளிக்குடி மாவூர் அஞ்சல்,
திருவாரூர். ................ எதிரிகள்

இவ்வழக்கானது 05.12.2025-ம் தேதி இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசுக்காக அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக வழக்கறிஞர் திரு. தெ. அசோக்குமார், எம்.காம்., பி.எல்., மற்றும் திருமதி. ஆர். ஜீவிதா, பி.ஏ., எல்.எல்.,எம்., ஆகியோர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இந்த வழக்கில் இந்நீதிமன்றம் இன்று வழங்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

**1. <u>அரசுத் தரப்பு வழக்கு</u> :**

ஓவெளிக்குடியை சேர்ந்த விஜயா க/பெ. அருள்தாஸ் என்பவரின் கணவர் அருள்தாஸ் தனது அண்ணன் தேவதாஸ் மனைவி 2வது எதிரி ஜெயலெட்சுமியுடன் தொடர்பு வைத்துக்கொண்டு தனது வாழ்க்கையை கெடுத்து வருவதாக திருவாரூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் சாட்சி 1 விஜயா புகார் கொடுத்ததால் சென்ற 08.11.2016 ம் தேதி காலை 10.15 மணிக்கு ஓவெளிக்குடி காளியம்மன் கோவில் அருகில் நடந்து சென்ற சாட்சி 1 விஜயாவை பார்த்து 2வது எதிரி ஜெயலெட்சுமி இதோ போரா தேவுடியா , குச்சிக்காரி என்று அசிங்கமாக திட்டியும், 3வது எதிரி நாகம்மாள் கையால் கண்ணத்தில் அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தியும், 1வது எதிரி தேவதாஸ் சாட்சி 1 விஜயாவை கட்டையால் அடித்து கொடுங்காயம் ஏற்படுத்தியும், அவரது புடவையை இழுத்து வயிற்றில் உதைத்து அவமானப்படுத்தி உன் சாவு என் கையில்தான் என்று மிரட்டி குற்றம் புரிந்துள்ளதாக 1 வது எதிரியின் செய்கையானது இ.த.ச சட்டப்பிரிவுகள் 326, 506(ii) IPC & 4 of TNPHW Act ன் கீழும், 2 வது எதிரியின் செய்கையானது 294(b) ன் கீழும், 3வது எதிரியின் செய்கையானது 323 ன் கீழும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார்கள் என்று திருவாரூர் தாலுக்கா காவல்நிலைய உதவி ஆய்வாளர் எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** 1 முதல் 3 எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்த நிலையில், 3வது எதிரி கடந்த 16.12.2024 ம் தேதியன்று இறந்தார் என்ற அறிக்கையுடன் கூடிய 3வது எதிரியின் இறப்புச் சான்றிதழ் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி 3வது எதிரியின் இறப்பு உறுதி செய்யப்பட்டதை தொடர்ந்து அவருக்கு எதிரான குற்றச்சாட்டு அற்றுபோய் விட்டது. 1, 2 எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரான பின்பு BNSS பிரிவு 230-ன் கீழ் குற்ற அறிக்கை மற்றும் இதர வழக்கு ஆவணங்கள் எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

**3. <u>குற்றச்சாட்டுகள்</u> :**

1, 2 எதிரிகளுக்கு வழக்கின் ஆவணங்கள் இலவசமாக வழங்கப்பட்ட பின் போதிய கால அவகாசம் வழங்கப்பட்டு இந்த நீதிமன்றத்தில் ஆஜரான பின் குற்றத்தைப் பற்றி வினவ 1, 2 எதிரிகள் குற்றத்தை மறுத்ததன் பெயரிலும், திருவாரூர் தாலுக்கா காவல்நிலைய உதவி ஆய்வாளர் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையை பரிசீலித்தப்பின் BNSS பிரிவு 263(1) -ன் கீழ் 1 , 2 எதிரிகள் மீது கீழ்க்கண்டவாறு குற்றச்சாட்டுகள் வனையப்பட்டது.

1வது எதிரி மீது சட்டப்பிரிவுகள் 326, 506(ii) & 4 of TNPHW Act ன் கீழும்,

2 வது எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(b) ன் கீழும்,

வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் 1, 2 எதிரிகளுக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, விளக்கப்பட்டு, குற்றத்தை ஒப்புக் கொள்கிறீர்களா அல்லது விசாரணை வேண்டுமா என்று வினவப்பட்டது. 1, 2 எதிரிகள் குற்றத்தை மறுத்தார்கள். அதற்குபின் அரசு தரப்பு சாட்சிகளை ஆஜர்ப்படுத்த உத்தரவிடப்பட்டது.

**4. <u>அரசு தரப்பு சாட்சியங்கள்</u> :**

அரசு தரப்பில் மொத்தம் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அ.சா.1 விஜயா தனது முதல் விசாரணை சாட்சியத்தில், " நான் தற்போது ஓவளிக்குடியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது உறவுக்காரர்கள் ஆவார். கடந்த 08.11.2026 ம் தேதி நான் எனது தெருவில் உள்ள காளியம்மன்கோவில் அருகே நடந்து சென்று கொண்டிருந்தேன். அப்போது என்னை யாரோ அடையாளம் தெரியாத நபர்கள் என்னை திட்டி, அடித்து விட்டார்கள். அப்போது எனக்கு காயம் ஏற்பட்டது. அப்போது நான் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். நான் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் என்னிடம் புகார் வாங்கிக் கொண்டார்கள். அந்த புகாரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. புகார் கொடுத்தேன். அந்த புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் என்னுடையதுதான். (புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை " என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.2 ராமச்சந்திரன் தனது முதல் விசாரணை சாட்சியத்தில், " நான் தற்போது ஓவளிக்குடியில் வசித்து விவசாய செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. அ.சா.1 ஐ தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு தெரியாது. நான் அன்று ஊரில் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. "என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.3 பரமசிவம் தனது முதல் விசாரணை சாட்சியத்தில், "நான் தற்போது ஓவளிக்குடியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். போலிசார் என்னிடம் ஒரு வெள்ளைத்தாளில் கையொப்பம் வாங்கி கொண்டார்கள். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. (பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது). போலிசார்

என்னை விசாரணை செய்யவில்லை " என்றும் கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.4 முருகேசன் திருவாரூர் தாலுக்கா காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில், " நான் தற்போது திருவாரூர் தாலுக்கா காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 09.11.2016 ம் தேதி மதியம் 14.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது திருவாரூர் TMCH லிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த மாவூர் ஓவளிக்குடியை சேர்ந்த அருள்தாஸ் மனைவி விஜயா என்பவரிடம் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற எண். 459/2016 சட்டப்பிரிவு 294(பி), 324, 506(2) மற்றும் சட்டப்பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின்கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 ஆகவும், செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது). இத்துடன் வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்காக உதவி ஆய்வாளர் திரு. ராஜாராமன் வசம் ஒப்படைத்தேன். எங்கள் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த திரு. ராஜாராமன் என்பவிரன் கையெழுத்தையும், கையொப்பத்தையும் நன்கு அறிவேன். அதன் அடிப்படையிலும், ஆவணங்களின் அடிப்படையிலும் சாட்சியம் அளிக்கிறேன். பின்னர் அன்றையதினமே 15.30 மணிக்கு உதவி ஆய்வாளர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் குமார், பரமசிவம் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். (பார்வை மகசர் அ.சா.ஆ.5 ஆகவும், வரைபடம் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது). பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்கள் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு முதலுதவி சிகிச்சை அளித்த திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவர் டாக்டர் அபிந்த் மற்றும் டாக்டர் கபில்ராஜ் என்பவர்களை

*விசாரணை செய்துள்ளார். பாதிக்கப்பட்டவரின் காயத்தன்மை கருததி இவ்வழக்கின் சட்டப்பிரிவினை 294(பி), 323, 326, 506(2) மற்றும் சட்டப்பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின்கீழ் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை பெற்றுள்ளார். (மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது). சாட்சிகளின் விசாரணையில் இருந்து சம்பவ உண்மை என்று தெரிய வந்ததால் எதிரியை தேடி வந்த நிலையில் எதிரி கடந்த மாண்பமை திருவாரூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் கடந்த 16.11.2016 ம் தேதியில் முன் பிணையில் சென்றுள்ளார். இத்துடன் அவரது அவரது விசாரணையை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவு 294(பி), 323, 326, 506(2) மற்றும் சட்டப்பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின்கீ குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்"* என்றும் கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

**5.** அரசு தரப்பு சாட்சியங்களில் 1, 2 எதிரிகளுக்கு எதிரான சாட்சியம் பற்றி 1, 2 எதிரிகளிடம் பிரிவு 351(1)(ஆ)-ன் கீழ் வினவ 1, 2 எதிரிகள் " பொய் சாட்சி " என்று மறுத்து விட்டார்கள். தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் "இல்லை" என்று கூறினார்கள்.

**6. <u>தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்</u> :**

1, 2 எதிரிகள் மீது கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துள்ளதா? என்பதேயாகும்.

**7. <u>தீர்வு</u> :**

இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

வழக்கு விசாரணையின்போது புகார்தாரர் மற்றும் பாதிக்கப்பட்ட சாட்சி ஆகியோர் சமரசம் ஆகிவிட்டதாக உபய தரப்பினர்கள் தரப்பில் BNSS பிரிவு 359 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், Madan Mohan Abbot v. State of Punjab [2008 SCC 4 - 582] என்ற மாண்புமிகு உச்சநீதிமன்ற வழக்கில்,

We need to emphasize that it is perhaps advisable that in disputes where the question involved is of a purely personal nature, the Court should ordinarily accept the terms of the compromise even in criminal proceedings as keeping the matter alive with no possibility of a result in favour of the prosecution is a luxury which the Courts, grossly overburdened as they are, cannot afford and that the time so saved can be utilized in deciding more effective and meaningful litigation. This is a common sense approach to the matter based on ground of realities and bereft of the technicalities of the law என்று கூறப்பட்டுள்ள மாண்புமிகு உச்சநீதிமன்ற வழிகாட்டுதலை ஏற்று இவ்வழக்கானது தரப்பினர்களுக்கு இடையேயான தனிப்பட்ட பிரச்சனை என்பதோடு தரப்பினர்கள் சமாதானமாகிவிட்டதாக BNSS பிரிவு 359 கீழ் மனு தாக்கல் செய்துள்ளதையும், அரசு தரப்பிற்கு புகார்தாரர் மற்றும் காயம்பட்டவரின் சாட்சியம் ஒத்துழைப்பு அளிக்காது என்பதையும் கருத்தில் கொண்டும் இவ்வழக்கில் முடிவு காண்பதே சரியானதாகும் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

அரசு தரப்பு சாட்சியங்களான புகார்தாரரான அ.சா.1, கண்ணுற்ற சாட்சியான அ.சா.2, பார்வை மகசர் சாட்சியான அ.சா.3 ஆகியோரின் சாட்சியங்களை பரிசீலனை செய்த வகையில் அரசு தரப்பிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்கள். 1, 2 எதிரிகளுக்கு எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து அரசு தரப்பு சாட்சியங்கள் யாரும் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, இவ்வழக்கின் அ.சா.1 முதல் அ.சா.3 ன் சாட்சியம் இந்நீதிமன்றத்தால் அரசு தரப்புக்கு ஆதரவாக ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை.

மேலும், இவ்வழக்கில் இதர பட்டியல் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. இவ்வழக்கின் வழக்கு பதிவு செய்த அதிகாரி அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.4 விசாரணை அதிகாரிக்காகவும் சேர்த்து சாட்சியம் அளித்துள்ளார். அவரின் சாட்சியம் மட்டும் 1, 2 எதிரிகளின் மீதான குற்றத்தை நிரூபிக்க போதுமானதல்ல என இந்நீதிமன்றம்

கருதுகிறது. எனவே, எதிரிகள் தான் இவ்வழக்கின் குற்றச்செயலில் ஈடுபட்டார்கள் என்பதை அரசு தரப்பு நிரூபிக்க தவறிவிட்டதாக இந்த நீதிமன்றம் கருதுகிறது.

**8. முடிவாக**, அரசு தரப்பு 1, 2 எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டை உரிய சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்காததால் 1வது எதிரி மீது சட்டப்பிரிவுகள் 326, 506(ii) & 4 of TNPHW Act 5ன் கீழும், 2 வது எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(b) ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து எதிரிகளை BNSS பிரிவு 271(1) ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

1, 2 எதிரிகள் எழுதிக் கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

| | Particulars under Rule 106 of Criminal Rules of Practice-2019 | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Description of the accused | | | | | | | Date of | | | | | | | | |
| Sl No. | Name of the Police station and the Cr.No. | Name | Father Name | Occupation | Residency | Age | Occurence | Complaint | Apprehension | Commitment | Commencement of trial | Close of trial | Sentence or order | Service of Copy of Judgment an accused |
| 1 | Tiruvarur Taluk P.S. Cr.No.459/2026 | Devadoss | Murugaiyan | - | Ovelikudi, Mavoor Post, Thiruvarur | - | 08.11.2016 | 09.11.2016 | - | not applicable | 20.02.2026 | 16.032026 | Accused is Acquitted | 16.03.2026 |
| 2 | Tiruvarur Taluk P.S. Cr.No.459/2026 | Jayalakshmi | Devadoss | - | Ovelikudi, Mavoor Post, Thiruvarur | - | 08.11.2016 | 09.11.2016 | - | not applicable | 20.02.2026 | 16.032026 | Accused is Acquitted | 16.03.2026 |

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 16-ம் நாள் திங்கட்கிழமை என்னால் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/- S. முஹம்மது பாசில்),
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம் (மு.கூ.பொ),
(நீதித்துறை நடுவர் நிலை),
திருவாரூர்.

9. <u>அரசு தரப்பு சாட்சிகள் :</u>

**அ.சா.1** விஜயா
**அ.சா.2** ராமச்சந்திரன்
**அ.சா.3** பரமசிவம்
**அ.சா.4** முருகேசன் - சிறப்பு உதவி ஆய்வாளர், திருவாரூர் தாலுக்கா காவல்நிலையம்.

10. <u>அரசு தரப்பு சான்றாவணங்கள் :</u>

**அ.சா.ஆ.1** புகாரில் உள்ள அ.சா.1ன் கையொப்பம்
**அ.சா.ஆ.2** பார்வை மகசரில் உள்ள அ.சா.3 ன் 2வது கையொப்பம்
**அ.சா.ஆ.3** புகார் வாக்குமூலம்
**அ.சா.ஆ.4** முதல் தகவல் அறிக்கை
**அ.சா.ஆ.5** பார்வை மகசர்
**அ.சா.ஆ.6** மாதிரி வரைபடம்
**அ.சா.ஆ.7** சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை

**11. <u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-</u>**

**இல்லை**

(ஒம்/- S. முஹம்மது பாசில்),
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம் (மு.கூ.பொ),
(நீதித்துறை நடுவர் நிலை),
திருவாரூர்.

1) வழக்கின் முடிவு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

2) வழக்கு விசாரணையின்போது எதிரிகள் பிணையில் இருந்து வந்தார்கள்.

**<u>நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>**

மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.